# கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான கட்டமைக்கப்பட்ட போட்டிப்பரீட்சை - 2019

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் (விசேட தரம்) பதவிக்கு பதவியுயர்வு செய்வதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய கிழக்கு மாகாண பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் சேவையில் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2019.05.15** ஆகும். இந் நேர்முகப்பரீட்சை கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

## 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்

2.1. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.2 இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.3. மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு கிழக்கு மாகாண பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தரம் I சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு திணைக்களத் தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

## 03. சம்பள அளவுத்திட்டம்

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 ற்கு அமைவாக
ரூபா. 41,580 – 11x755 –18x1030-68,425 (MN-7-2016)
4வது சம்பளப் படிநிலையில் வைக்கப்படும்

## 04. பொதுவான தகைமைகள்

4.1 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

## 05. ஆட்சேர்ப்பு முறை

5.1 கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) அதி சிறப்பு சேவை வகையின் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் (விசேட தரம்) பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பதவியுயர்வுத் திட்டம் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் புள்ளி முன்னுரிமைக்கமைய பதவியுயர்வு செய்யப்படுவார்.

5.3 அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னராக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் மற்றும் தகுதியற்றவர்களின் விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

## 06. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் (விசேட தரம்) இற்கு பதவியுயர்வு செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு தேவையான தகைமைகள்

i. **வயதெல்லை :**
கிழக்கு மாகாண அரச சேவையின் நிரந்தர பதவியிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

ii. **தகைமை :**

1. மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் (MN-03) தரம் I இல் (06) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்திதி செய்திருத்தலும் உரிய ஆறு (06) சம்பள ஏற்றங்களை பெறிறிருத்தலும்.

2. தரமுயர்வு வழங்கும் தினத்திற்கு உடன் முந்திய ஐந்து (05) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

3. அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்புச் செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கம் தினத்துக்கு முன்னரான (06) வருட காலத்தில் திருப்திகரமானமட்டத்திலான அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையைப் பெற்றிருத்தல்.

4. மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

iii.**கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை :**

.

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்** | **புள்ளிகள்** |
|---|---|
| (i) சேவை அனுபவம் | 45 |
| (ii) திறமை | 50 |
| (iii) நேர்முகப்பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

**சேவை அனுபவம்**

1. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தரம் 1இல் (06) ஆறு வருட சேவைக்காலத்தின் பின்னர் சேவையாற்றிய ஒவ்வொரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் உரித்தாகும்.

2. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தரம் 1இல் (06) ஆறு வருட சேவைக்காலத்தின் பின்னர் சேவையாற்றிய ஒவ்வொரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் உரித்தாகும். ஒரு வருடத்திற்கு குறைவான ஆனால் (06) மாதத்திற்கு மேலான காலப்பகுதிக்கு 02 புள்ளிகள் உரித்தாகும்.

3. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் தரம் 1இல் (06) ஆறு வருட சேவைக்காலத்தின் பின்னர் சேவையாற்றிய ஆறு மாத காலத்திற்கு குறைவான காலப்பகுதிக்கு புள்ளிகள் உரித்தாகாது.

**திறமை**

1. நியமன அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் விசேட தாரப் பதவியில் பதில் கடமைக்கான ஒரு வருடத்திற்காக 4 புள்ளிகள் வீதம் ஆகக் கூடிய புள்ளிகளாக 12 புள்ளிகள் உரித்தாகும். ஒரு வருடத்திற்கு குறைந்த ஆனால் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக இரண்டு புள்ளிகள் உரித்தாகும். 06 மாதங்களுக்கு குறவைான காலப்பகுதிக்காக புள்ளிகள் உரித்துடையதாகாது.

2. திணைக்களத் தலைவர் அல்லது அதற்கு மேலான பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருக்கும் சேவை மதிப்பீட்டுச் சான்றிதழ் ஒன்றுக்காக 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடிய புள்ளிகள் 8 வழங்கப்படும். இச்சான்றிதழ் ஆனது உரிய படிவத்தில் அமைய வேண்டியதுடன் திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. சுகாதார விடயத்துடன் தொடர்புடைய பயிற்சி மற்றும் புலமைப் பரீட்சைக்காக ஒரு தடவைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 8 புள்ளிகள் உரித்தாகும்.

4. பல்கலைக்கழக பட்டத்திற்காக 7 புள்ளிகள், டிப்ளோமா சான்றிதழ் (பல்கலைக்கழகம் அல்லது அதற்கு சமமான நிலையிலான அங்கீகரிக்கப்பட்ட நிலையிலான அங்கீகரிக்கப்பட்ட நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற ஒரு வருடத்திற்கு மேலான டிப்ளோமா பயிற்சி நெறிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்) ஒரு சான்றிதலுக்காக 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடிய 10 புள்ளிகள் உரித்தாகும்.

**07. விண்ணப்பிக்கும் முறை**

7.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

7.2. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில், **“கிழக்கு மாகாண பொதுச்சேவையின் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் - விசேட தரப் பதவிக்கு கட்டமைக்கப்பட்ட திறமை அடிப்படையில் பதவியுயர்த்தல் – 2019”** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

7.3 விண்ணப்பதாரரின் கையொப்பமானது, திணைக்களத்தின் திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டு திணைக்களத் தலைவருடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7.4 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2019.05.15**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகா ண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. (விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவது தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)

செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

**எம்.வை சலீம்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்

(அலுவலக உபயோகத்திற்கு)

**மாதிரி விண்ணப்பபடிவம்**

**<u>கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் (விசேட தரம்) பதவிக்கு திறமை அடிப்படையில் பதவியுயர்த்தல் – 2019</u>**

நிரந்தர வசிப்பிட மாவட்டம் :- ……………………………………………………………………………….

1.0. 1.1. முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்:
…… ………………………………………………………………………………………………….……….
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA, A.B.C)

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

...……………………………………………………………………..…………………………………………….

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

……...................................................................................................…………………………………..

1.4. பால் : (பெண் - F / ஆண் - M) ☐
(உரிய எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………

2.0. 2.1. நிரந்தர முகவரி :-
………………………………………………………………………..…………………………….…………...
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி :-
……………………………………………………………………………………………………………...
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-
………………………………………………………………………………………………...…………...
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2019.03.01 ஆந் திகதியில் வயது

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக.
……………………………………………………………………………………………...……

6.0. கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,

6.1. திணைக்களம் :
…………………………………………………………………………….……………………..………..

6.2 தற்போதைய பதவியும் தரமும் :
……………..……………………………………………………………………..……………………...

6.3. தற்போதைய தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி :
……………………………………………………………………………………………………..……….

7.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் பதவியுயர்விற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், பதவியுயர்விற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ………………………

8.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்று நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்

திகதி : ……………………………

பெயர் : ………………………………………
பதவி : ………………………………………
முகவரி : ………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

9.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி …................................................ அவா்களின் விண்ணப்பத்தை சிபாா்சு செய்து சமா்ப்பிக்கின்றேன். அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி : ……………………………
பெயர் : ………………………………………
பதவி : ………………………………………
முகவரி : ………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)